காசநோய் மருத்துவமனை, செங்கிப்பட்டி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை பணப் பற்றாக் குறையுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், 1970–71-ல் ஏற்பட்ட நிகரப் பற்றாக்குறை எவ்வளவு?

(உ) அதை ஈடு செய்ய அரசு அனுமதித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ரூ. 92,101.84.

(உ) செங்கிப்பட்டி, மகாத்மா காந்தி காசநோய் மருத்துவ மனைக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 58,000 மான்யத் தொகையாக வழங் கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத் திற்கும் அருகிலுள்ள மாவட்டங்களுக்கும் உள்ள ஒரே மருத்துவ மனை இது. அரசினிடமிருந்து ரூ. 90 ஆயிரம் குறைவாகக் கிடைக்கிற காரணத்தால் பல நோயாளிகள் அனுமதி கிடைக்காமல் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. எனவே, ஈட்டுத் தொகையை அதிகரிக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசினுடைய நல்லெண்ணத்தை இந்தப் புள்ளி விவரங்களிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். 1968–69 இல் மானியமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 80 ஆயிரம். 1969–70-இல் மானியமாகக் கொடுக்கப் பட்ட தொகை ரூ. 44 ஆயிரம். 1970–71 இல் மானியமாகக் கொடுச்கப்பட்ட தொகை ரூ. 58 ஆயிரம். எனவே, உதவி மானியத் தொகை அதிகரிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Honorary Surgeons

*136 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish the post of Honorary Surgeons; and

(*b*) if so, when it will be abolished?

1972 ஆகஸ்ட் 21]

கௌரவ டாக்டர்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கௌரவ டாக்டர்களை (Honorary Surgeons) நீக்கிவிடும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது நீக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : பரிசீலனையில் இருக்கிறது.

Purchase of Modern Medicines

* 137 *Q*.—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether instructions have been sent to Siddha Dispensaries and Dispensaries of Indigenous Medicine under the control of Local Bodies prohibiting the purchase of modern medicines in such institutions?

ஆங்கில மருந்துகளை வாங்குதல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சித்த, இந்திய மருத்துவ முறை மருத்துவ மனைகள் ஆங்கில மருந்துகளை வாங்கக் கூடாதென்று தடை விதித்து அந்த மருத்துவ மனைகளுக்கு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு உள்ளூராட்சி மன்றங்கள், கோயில்கள் முதலியவற்றால் நடத்தப்படும் இந்திய மருத்துவ முறை மருத்துவ மனைகளில் பொறுப்பேற்றுள்ள மருத்துவ அதிகாரிகள் தேவையான சித்த மருந்தோ, ஆயுர்வேத மருந்தோ அல்லது யூனானி மருந்தோ அதை மட்டுமே வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனினும், அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள இந்திய மருத்துவ மனைகளில் வாங்கும் மொத்த மருந்தில்